## DEPOSITION OF WITNESS

Judicial Form No. 53

(See Rule 42)

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, No.I, UDUMALPET**

| | | |
|---|---|---|
| Calender | : | CC No. 218/2017 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for | : | Prosecution P.W.2 |
| | | Defence |

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : கல்பானா | தொழில் | : |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : லாசர் | ஜாதி | : |
| கிராமம் | : | இனம் | : |
| தாலூக்கா | : | வயது | : |
| Mail ID | : | Mobile No. | : |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on 14.07.2022.

**முதல் விசாரணை:**

நான் உடுமலையில் வசித்து வருகிறேன்.இல்லத்தரசியாக இருந்து வருகிறேன். அ.சா.1 எனது கணவர் ஆவார். கடந்த 03.05.2015 அன்று காலை 9 மணிக்கு சர்ச்சுக்கு வீட்டை பூட்டிவிட்டு நான் மற்றும் எனது குழந்தைகளுடன் தளி ரோட்டில் உள்ள சி.எஸ்.ஐ சர்ச்சுக்கு சென்றுவிட்டு காலை 10.15 மணிக்கு வீட்டுக்கு திரும்பி வந்தோம். வீட்டின் கேட் திறந்து தாழ்பாள் உடைந்து கிடந்தது. பெட்ரூம் மற்றும் அனைத்து அறைகளின் கதவும் திறந்திருந்தது. வீட்டில் தேடிப் பார்த்த போது எனது மகளின் திருமணத்திற்காக வைத்திருந்த சுமார் 93 பவுன் தங்க நகைகள் காணாமல் போயிருந்தது. வீட்டிற்குள் தேடிப் பார்த்து விட்டு எனது கணவர் மாலை 5 மணிக்கு காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். 29.06.2015 அன்று நகை கிடைத்துவிட்டதாக உடுமலை போலீசார் தகவல் கூறியதன் பேரில் காவல்நிலையத்திற்கு சென்று பார்த்த போது எங்கள் கடையில் வேலை செய்தவர்கள் எடுத்ததாக கூறி அவர்கள் இருப்பதாக கூறினார்கள். நான் எனது நகைகளை அடையாளம் காட்டினேன். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

நாங்கள் சர்ச்சுக்கு சென்ற போது வீடு மற்றும்முன் கேட் போன்றவற்றை பூட்டி விட்டு தான் சென்றேன் என்றால் சரிதான். எங்கள் வீட்டிற்கு அக்கம் பக்கம் வீடுகள் உள்ளது என்றால் சரிதான். கிழக்கு பக்கம் வீடு உள்ளது. எனது வீடு மக்கள் நடமாட்டம் உள்ள இடத்தில் உள்ளது என்றால் சரிதான். வீட்டில் நாய் வளர்த்து வந்தேனா என்றால் சரிதான். பொம்மேரியன் நாள் வளர்த்து வந்தேன். அடையாளம் தெரியாத புது ஆட்கள் வீட்டிற்கு வந்தால் குரைக்கும் என்றால் சரிதான்.

பழக்கமானவர்கள் வீட்டிற்கு நாய் குரைக்காது. உள்கதவு தாழ்பாள் உடைக்கப்பட்டு இருந்தது. பெட்ரூம் கதவு தாழ்பாளும் உடைக்கப்பட்டிருந்தது. காணாமல்போன நகைகள் எங்கு வைத்திருந்தேன் என்றால் செல்பிலும், பீரோவிலும் வைத்திருந்தேன். அதன் சாவியை பெட்டிற்கு கீழே வைத்திருந்தேன். 1 ¼ மணி நேரத்தில் சர்ச்சுக்கு சென்றுவிட்டு திரும்பி வந்துவிட்டேன் என்றால் சரிதான். 1 ¼ மணி நேரத்தில் முன் கேட்டை திறந்து பெட்ரூம் கதவை உடைத்து திருடியுள்ளார்கள் என்றால் சரிதான்.

மேற்படி செயலை எங்கள் வீட்டை பற்றி நன்கு தெரிந்த பழக்கமான நபர் தான் செய்திருக்க முடியும் என்றால் சரிதான். எதிரிகளை நான் பார்ததது இல்லை இதற்கு முன்னர்அவர்கள் என் வீட்டிற்கு வந்ததில்லை. காணாமல் போன நகைகள் எவ்வளவு என்று கணக்கிட எவ்வளவு நேரம் ஆனது என்றால் மாலை வரை ஆனது. காணாமல் போன தங்க நகைகள் 93 பவுன் என்றால் சரிதான். நகைகள் கிடைத்து என்று தகவல் சொன்ன போது உடுமலை அனைத்து மகளிர் காவல் நிலையத்திற்கு சென்றேனா என்றால் ஆமாம். அங்கு ஆஜர் எதிரிகள் இருவரையும் பார்த்தேனா என்றால் பார்த்தேன்.

உடுமலைஅனைத்து மகளிர் காவல் நிலையத்தில் வைத்து தான் 27 ½ பவுன் நகைகளை எனக்கு கொடுத்தார்கள். காணாமல் போன நகைகளில் கிடைத்தது போக மீதி நகைகள் குறித்து கேட்டேனா என்றால் கேட்டேன் மேற்படி கைப்பற்றப்பட்ட நகைகளுடன் கொஞ்சம் கவரிங் நகைகள் மற்றும் பணம் ரூ.42,000/– நகை விற்றதில் மீதம் இருந்த பணம் என்று கூறி கொடுத்தார்கள். மேற்படி ரூ.42,000/– பணம் எத்தனை பவுன், யாரிடம் விற்பனை செய்தது என்ற விவரத்தை போலீசார் கூறினார்களா என்றால் இல்லை.

என்னை போலீசார் தொடர்ச்சியாக 2 முறையும் அதன் பின்னிட்டு 6 முறையும் என்னை விசாரணை செய்தார்கள். என்னை 6 முறை விசாரித்த போது காணாமல் போன நகைகள் குறித்தும், வீட்டிற்கு வரும் நபர்கள் குறித்தும், கடையில் பணிபுரியும் நபர்கள் குறித்தும், போன் போன்றவற்றை பரிசோதனை செய்தார்கள். எங்கள் குடும்ப உறுப்பினர்களின் போன்

அனைத்தையும் சோதனை செய்தார்கள். எனது கடையில் பணிபுரிந்த பணியாளர்களின் போனை சோதனை செய்தது பற்றி எனக்கு தெரியாது.

பொதுவாக தங்க நகைகள் பட்டியலில் கவரிங் நகை வராது என்றால் சரிதான். காணாமல் போன நககைகளை கணக்கிடும் போது டிரெஸ்ஸிங் டேபிளில் இருந்த கவரிங் நகைகள் காணாமல் போனதால் அது குறித்தும் கூறினேன். இந்த விவரத்தை எனது கணவர் புகாரில் கூறவில்லை என்றால் அது எனக்கு மட்டும் தெரியும் அவர் கூறியிருக்க வாய்ப்பில்லை. அன்று கவரிங் நகைகள் காணாமல போன விவரம் மாலை எனக்கு தெரியவந்தது என்றால் சரிதான். மேற்படி விவரத்தை ஏன் கணவரிடம் கூறவில்லை என்றால் நகை சம்மந்தமான விவரங்களை நான் தான் பார்த்துக்கொள்வேன்.

திருட்டு போன நகைகளில் எத்தனை பவுன் தங்க நகை, எவ்வளவு கவரிங் நகை என்றால் தங்க நகை 93 பவுன் ஆகும். ஆனால் கவரிங் நகைகள் எவ்வளவு என்று எனக்கு தெரியவில்லை. 93 பவுன் தங்க நகை அல்லாமல் கவரிங் நகைகள் காணாமல் போயுள்ளது என்றால் சரிதான்.மேற்படி விவரத்தை போலீஸ் விசாரணையில் சொல்லியுள்ளேன். 93 பவுன் தங்க நகையும், அதனுடன் இருந்த கவரிங் நகையும் காணாமல் போனதாக போலீஸ் விசாரணையில் கூறியிருந்தேன்.

கைரேகை நிபுணர்கள் வந்து கைரேகை பதிவு செய்தார்கள். மோப்ப நாய் வந்தது யாரையும் பிடிக்கவில்லை. புகாரை யார் எழுதியது என்றால் நான் சொல்லி எனது மகள் எழுதினார். வீட்டில் வைத்து எழுதப்பட்டது. நான் புகாரில் 93 பவுன் தங்க நகையும் கவரிங் நகையும் என்று குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை. எனது கணவர் சமுதாயத்தில் செல்வாக்கானவர் என்பதால் காலை 11 மணிக்கே எவ்வளவு நகை காணாமல் போனது என்று தெரிந்து கொண்டு வேண்டுமென்று அதிகமான நகைகளை குறிப்பிட்டு தாமதமாக மாலை 5 மணிக்கு புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. எனது கணவருக்கு உள்ள செல்வாக்கு காரணமாக அதிகமாக குறிப்பிட்டால் பெற்று கொடுப்பார்கள் என்ற காரணத்தினால் பொய்யாக எதிரிகள் மீது புகார் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எனவே தான் இந்த புகாரை சரிசெய்வதற்காக 6 முறை என்னை விசாரித்தார்கள் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும், இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்று சொன்னால் சரியல்ல.